2012 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அமைத்து, தேவை ஏற்படின் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், மூலக் கேள்வி வால்பாறையைப் பற்றியது. விருதுநகருக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது?

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற நிறுவனம் இன்று மிகப் பெரிய சொத்துகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அது நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தை disinvestment செய்து நல்ல முறையில் இயங்க வைத்தால், அந்தச் சொத்துக்களால் அரசுக்கு வருமானம் கிடைக்கும். அம்மாதிரியான கருத்துரு ஏதாவது அரசிடம் இருக்கிறதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது relevance-இல் உள்ளது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tan tea-இல் இன்றைய தலைமுறையினர் தேயிலைத் தோட்டப் பணி செய்ய விருப்பம் இல்லாததாலும், அவர்கள் தமது குடும்பத்துடன் நகரத்தை நோக்கி வேறு பணிகளுக்குச் சென்றுவிடுவதாலும், தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளது. இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 9-3-2012 அன்று நடைபெற்ற சீராய்வுக் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகளின்படி இயந்திரங்கள்மூலம் பசுந்தேயிலை அறுவடை செய்ய துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

நியாய விலைக் கடைகள்

***2574—திரு. கு. நல்லதம்பி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 100 மற்றும் 101—ஆவது வட்டங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

எழும்பூர் தொகுதி, 100 மற்றும் 101—ஆவது வட்டங்களில் புதிய நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழைய 100 மற்றும் 101—ஆவது வட்டங்களில் வசிக்கும் மக்கள், நெடுந்தொலைவு சென்று பொருட்களை வாங்கி வருவதால், சிரமம் ஏற்படுகிறது. அதேநேரத்தில், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கேசவப்பிள்ளை பார்க் பகுதியில் ஒரே இடத்தில் நான்கு கடைகள் அமைந்துள்ளதால், மக்கள் ஒரே நேரத்தில் பொருட்களை வாங்குவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, 100 மற்றும் 101—ஆவது வட்டங்களுக்கு விரைவில் ரேஷன் கடைகள் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 100 மற்றும் 101—ஆவது*

2012 ஏப்ரல் 16]

வட்டங்களைச் சேர்ந்த மாநகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அந்தப் பகுதியினுடைய பொதுமக்களிடத்திலிருந்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குப் பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இப்பொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 100 மற்றும் 101–ஆவது வட்டங்களில், புரசைவாக்கம், ஓட்டேரி மற்றும் சூளை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இந்தப் பகுதிகள், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலையில் வட்டம் 100–இல் நடத்தப்பட்டுவரும் ராகவா தெரு நியாய விலைக் கடையிலுள்ள 1,701 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளதைப் பிரித்து, ஒரு நியாய விலைக் கடை அமைக்கவும், அதேபோல வட்டம் 101–இல், வெங்கடாசலம் தெரு நியாய விலைக் கடையில் 2,748 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பிரித்து புதியதாக ஒரு நியாய விலைக் கடை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–30

நகர்ப் பகுதிகளில் முழுநேர நியாய விலைக் கடைகள் அமைக்கவேண்டுமென்று சொன்னால், குறைந்தது 800 குடும்ப அட்டைகளும் 1,000–க்கு மிகாமலும் இருக்கவேண்டும். இது விதிகளுக்குட்பட்டு வருவதால், இந்தக் கடைகளையெல்லாம் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதனை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு செய்தி. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ரேஷன் கடைகளைப் பிரிப்பது பற்றி ஒரு கருத்தைச் சொன்னார். நியாய விலைக் கடைகளை அமைப்பது, பிரிப்பது குறித்த Norms–ஐ மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக, அதற்கான 'Guidelines' என்னென்ன என்பதை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சிறு குறிப்பாக அச்சிட்டு, உறுப்பினர்களுக்கு circulate செய்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் இது தொடர்பாகத் துணைக் கேள்விகள் கேட்பது குறையும். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும், மலைப் பகுதிகளிலும் முழுநேரக் கடைகள், பகுதிநேரக் கடைகள் அமைப்பது, பிரிப்பது குறித்து என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதை அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஒரு கையேடாகவே உணவுத் துறை வழங்கிடும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பெரிய கடைகளைப் பிரிப்பது குறித்தும் அதிலே சேர்த்துவிடுங்கள். இதற்கு மேலும் துணைக் கேள்வி கேட்கப் போகிறீர்களா? மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேஜி. பிரின்ஸ், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. சி. சண்முகவேலு, திரு. அ. பாப்பா சுந்தரம், திரு. கே. உலகநாதன், திரு. கா.கோ. ரமேஷ் எல்லோரும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

96—

சத்துணவுக் கூடம்

***7840—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, பழஞ்சநல்லூர் ஊராட்சி, தேவனபுத்தூர் கிராமத்திற்குச் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?